**தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1.1 3.1.2 மற்றும் 3.1.3 அட்டவணைகளில் அடங்கிய வருமானக் குறியீடுகள் தொடர்பான 02 வருமானக் கணக்குகளும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை

பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிப்படாமை. | 2.9(அ) |
| | | 2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்<br><br>2. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.3<br><br><br><br>2.8 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள்<br>2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.10(அ)(ஆ)<br><br>2.11 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை.<br>2. வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப் படாமை/ தாமதமாக சமர்ப்பித்தல் | 2.9(அ)<br>2.2.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விஷேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தி யோகத்தர்களினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள்<br>2. அரசாங்க உத்தியோகத்தர் களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதியை அறவீடு செய்தல் | 2.10(அ)(ஆ)<br>2.11 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | 1. சொத்துக்களிலிருந்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் கிடைக்காமை<br>2. நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.4(அ)<br>2.5 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செய்பணிகள்

(i) அரச சேவை ஓய்வூதிய நலன்கள் ஓய்வூதிய யாப்பு விதவைகள் மற்றும் அனாதைகள் சட்டத்திற்கு இணங்கக் கூடிய விதமாக ஏற்றுக்கொள்ளும் செயன்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை ஆக்குதல்.

(ii) ஓய்வூதியம் தொடர்பாக சட்ட வரையறை, விதிகளுக்கு மற்றும் கொள்கை தீர்மானங்களுக்கு இணங்க அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை வழங்குதல்.

(iii) மாதாந்த ஓய்வூதிய நலன்களை இடையறாமல் செலுத்துதல் மற்றும் ஒரே தடவையில் செலுத்தும் நலன்களை சரியான முறையில் வழங்குதல்.

(iv) அரச ஊழியர்களின் சேமலாப நிதி முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நலன்களை வழங்குதல்

(v) அரசு சார்பில் விதவைகள் அநாதைகள் பங்களிப்பு தொகை சேகரித்தல் மற்றும் ஏனைய வருமானங்களை சேகரித்தல் மற்றும் முகாமை செய்தல்.

(vi) ஓய்வூதியம் தயாரிக்கும் அலகுகள் ஓய்வூதியம் செலுத்தும் வங்கிகள் மற்றும் கொடுப்பனவு வலை பின்னலுடன் ஆக்கபூர்வமான தொடர்பு ஒன்றினை பேணல் மற்றும் மேம்படுத்தல்.

(vii) சமூக பாதுகாப்பு மீதான உலகத்தின் போக்கினை ஆய்வு செய்து புதிய சமூக பாதுகாப்பு முறைமைசார் தொடர்பாக கொள்கைகள் தயாரித்தலுக்காக உதவுதல்.

(viii) வருடாந்த பாதீடு தயாரித்தல் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக சட்டவாக்க மன்றத்திற்கு பொறுப்பாக இருத்தல்.

(ix) ஓட்டுமொத்த ஓய்வூதியம் பெறும் மக்களின் பொருளாதார மற்றும் சமூக நலனோம்பலுக்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல் மற்றும் செயற்படுத்துவதற்கு தனியார் மற்றும் அரச சார்ப்பற்ற துறையின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல்.

(x) ஓய்வூதிய சங்கங்கள் தலைமைத்துவம் வகிக்கும் சிவில் சமூக உயிர் ஊட்டத்துடன் தொடர்பு கொண்டு பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்.

(xi) வம்சங்களிடையே இடை தொடர்புகள் ஏற்படுத்தல்களுக்காக முன்னோடியாக பங்களிப்புக் செய்தல்.

### 2.2 பெறுகை செயன்முறையினுடன் வழங்கல் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 போதியளவு நிறைவேற்றப்படாத கருமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விதவைகள், அனாதைகள் பிரிவில் மீளாய்வாண்டு இறுதி அளவில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத 1500 விட கூடுதலான கோவைகள் காணப்பட்டதுடன், கொடுப்பனவுகள் பெறுவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைத்த திகதி முதல் உத்தியோகத்தரின் தகவல்கள் பெறாமை. பிரதேச செயலகங்களில் இருந்து தகவல்கள் வழங்குவதில் தாமதம் மற்றும் மருத்துவ சபை அறிக்கை கிடைக்கப் பெறாமை ஆகிய காரணங்களினால் 01 வருடம் முதல் 07 வரை காலமாக கொடுப்பனவு செய்யமுடியாமல் காணப்பட்டதென தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் அரசாங்க ஊழியர் சேமலாப நிதியப் பிரிவுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களில் குறைபாடுகளை காட்டுவதற்கு 3 மாதங்கள் முதல் 5 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது.

(இ) சமூக பாதுகாப்பு பங்களிப்புத் தொகையினை திருப்பி பெறுவதற்காக நிறுவனத்தினால் அனுப்பப்படும் ஓய்வுபெற்ற உத்தியோத்தர்களின் விண்ணப்பம் தபால் பகுதிக்கு கிடைத்து பங்களிப்பு தொகை பகுதிக்கு கிடைப்பதற்கு ஒரு நாள் முதல் 27 நாட்கள் வரை காலமொன்று மற்றும் பங்களிப்புத் தொகை கிடைத்து குறைபாடுகளை குறிப்பிட்டு கடிதமொன்று அனுப்புவதற்கு 89 நாட்கள் முதல் 234 நாட்கள் வரை காலமொன்று கடந்துள்ளது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு விதவைகள் அனாதைகள் பங்களிப்பு தொகை திருப்பி செலுத்தும் பகுதியில் குறைபாடு உடைய 645 கோவைகள் காணப்பட்டதுடன், அவற்றில் 243 கோவைகள் அதாவது 38 சதவீதமானவை 3 வருடங்களுக்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த கோவைகள் என அவதானிக்கப்பட்டது.

**2.2.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

---

2002 செப்டம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைகளத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிதியாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருக்காததுடன், வரைவு அறிக்கை அங்கீகாரத்திற்காக 2018 ஆகஸ்ட் 28 திகதி அளவிலும் சபை சமர்பித்திருக்கவில்லை.

**2.3 பெறுகை செயன்முறையினை செயற்படுத்தாமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா ஒரு மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், வருடாந்த பெறுகைத் திட்டத்தில் அடங்கியுள்ள நடைமுறைக்கு மற்றும் ஆலோசகர்களை தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 13.1 இற்கு முரணாக ஒற்றை மூலவள தெரிவுமுறை (Single Source Selection Method) யின் கீழ் போதியளவு அனுபவம் இல்லாத புதிய தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையின் பராமரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கான விசாரணை நியதிகளின் (Term of refferenace) உள்ளடங்கிய தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பன உத்தேச பதவியணியின் பிரதான உத்தியோகத்தர்களிடம் காணப்படவில்லை.

(ஆ) ரூபா 3,628,400 பெறுமதியான 4 ஒப்பந்த வேலைகளின் ஆரம்பத்தல் 2017 ஆண்டு பெப்ரவரி மாதம் திட்டமிட்டிருந்த போதிலும், 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு விரைவாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 701(i) இன் பிரகாரம் ரூபா 3,628,400 தொகை பெறுமதியின் 04 ஒப்பந்த வேலைகளின் உடன்படிக்கையின் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்ய வேண்டிய காலம் மற்றும் தாமத்திற்காக அறவிடப்படும் தாமதக் கட்டணம் என்பன அடங்கியிருக்கவில்லை.

(ஈ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் போது ஒப்பந்த வேலைக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதி கையொப்பம் இட வேண்டும் எனினும், ரூபா 1,752,575 தொகைக்கான 6 நிழல் பிரதி இயந்திரங்கள், ரூபா 9,782,000 இற்கான 100 மடி

கணினிகள் ரூபா 1,400,304 பெறுமதியுள்ள ஸர்வா இயந்திர கொள்வனவு செய்த போது வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) சொத்துக்களின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை

ஓய்வூதிய திணைக்கள வளாகத்தின் 17 நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கியிருந்ததுடன், 2018 ஜூன் 04 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 50.79 மில்லியனாகும். அவற்றில் 08 வருடங்களை விட மிகையான நிலுவையாகவுள்ள மீதி ரூபா 27.72 தொகை காணப்பட்ட 4 அரச நிறுவனங்கள் 2017 செப்டம்பர் 25 திகதியில் அளவில் ஓய்வூதிய திணைக்கள வளாகத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், கோவைகள் மற்றும் உடன்படிக்கைகள் இன்மையால் நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது.

### (ஆ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேவையினை இனங்காணாமல் கொள்வனவு செய்திருந்த ரூபா 940,780 இற்காக டோன(ர்), ரிபன் மற்றும் கணிணி டிஸ்கட் போன்ற பொருட்கள் 12 விடயங்களுக்கு உரிய நிகழ் பிரதி இயந்திரப் பாவணை குறைவு எனவும் மற்றும் பயன்படுத்தாமையினால் 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்கள வளாகத்தில் 720 சதுர அடி அளவைக் கொண்ட கடலோர பாதுகாப்பு முகாமைத்துவ செயற்திட்டத்திற்கான வழங்கியிருந்த கட்டிட வளாகச் செயற்திட்டம் அகற்றப்பட்ட 2014 அக்தோபர் மாதம் முதல் செயற்படாது காணப்பட்டது.

## 2.5 இழப்புக்களும் சேதங்களும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் ஓய்வூதியம் மிகையாகச் செலுத்திய தொகை ரூபா 551.95 மில்லியன் தொகையாக இருந்தது. இந்த தொகை தவணைகளாக அறவிடப்பட்டிருந்த போதிலும் 10 வருடத்தை விடக்கூடிய காலம் முதல் காணப்படும் ரூபா 9.94 மில்லியன் இனாலும், 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான வீச்சின் காலம் முதல் காணப்படும் ரூபா 51.17 மில்லியனினால் மற்றும் 05 வருடங்களை விட குறைந்த காலம் முதல் காணப்படும் ரூபா 490.83 மில்லியனையும் கொண்டிருந்தது.

(ஆ) ஓய்வூதியம் மிகையாக செலுத்தல் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட அறிக்கைகள் கணக்காய்வாளர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் மிகையாக செலுத்தியிருந்த ஓய்வு பெற்றோரிடம் மீண்டும் அறவிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு இயலுமான வகையில் ஒவ்வொரு ஓய்வு பெற்றோருக்கு தனிப்பட்ட கோவைகள் பேணியிருக்கவில்லை.

(இ) 2016 ஆண்டிற்காக ஒதுக்கீட்டுக் கணக்கு இழப்புக்கள் மற்றும் கைவிடப்படல் என இறுதி மீதி ரூபா 320.25 மில்லியன் தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா 321.36 மில்லியன் தொகை என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 1.11 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஈ) இழப்புக்களும் சேதங்களும் அட்டவணையில் 2016 ஆண்டிற்கான இறுதி மீதிகள் மற்றும் 2017 வருட ஆரம்ப மீதியை இணக்கஞ் செய்த போது பிரதேச செயலகங்களினால் அறவீடுகளில் 254 பிரதேச செயலகங்களில் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நேர் அறவீடுகளில் 45 பிரதேச செயலகங்களில் வித்தியாசங்கள் காணப்பட்டன.

(உ) 10/12 வருடங்களை விட குறைவான சேவைக் காலத்தையுடைய ஊனமுற்ற முப்படை அங்கத்தவர்களுக்கு சேவை ஓய்வூதியம் மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் ஒன்றிணைக்காமல் வெவ்வேறாச் செலுத்தப்படுகின்றமையால் 2016 ஜனவரி 01 திகதியின் பின்னர் ஓய்வுபெற்ற முப்படை அங்கத்தவர்கள் 717 பேருக்கு 2017 ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை மாத்திரம் ரூபா 18,868,554 தொகை மிகையாக செலுத்தியிருந்ததென தெரிவுக் கணக்காய்வின் கீழ் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.6 தீர்க்கப்பட்டிந்த கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்கு உரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காணப்படுகின்றன.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயங்கள் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (i) | 2015 | 3.14(அ) | ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற 10 நீதிபதிகளுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 28.70 மில்லியன் பணிக் கொடையில் ரூபா 15.94 தொகை 10 வருடங்களில் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) | 2013 | 2.7(அ) | ஈ - ஓய்வூதிய செயற்திட்டத்திற்காக சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், பயற்சி பெறல் தவிர ரூபா 182.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2013 நவம்பர் 01 திகதி முதல் இந்த செயல்திட்டம் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 2013 | 1.6(ஆ) I | பிரிவேனாக்கள் மற்றும் உதவிபெறும் பாடசாலைகளின் ஆசிரியர்களின் ஓய்வூதியத்திற்காக அடிப்படை சம்பளத்தில் 6 சதவீதம் என கிடைக்கும் பங்களிப்புத் தொகையை ஓய்வூதிய நிதியமொன்றுக்கு செலவு வைக்கப்படாமல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2016 | 3.4(ஊ) I | மையப்படுத்தப்பட்ட தரவு முறைமையில் அடங்கியுள்ள ஓய்வூதியம் பெற்றோரின் ஓய்வூதிய புள்ளி விபரம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |

## 2.7 முகாமைத்துவ திறமையின்மை

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வூதிய திணைக்கள வளாகத்தில் வாடகை அடிப்படையில் நடாத்தப்பட்டு வரும் தபால் நிலையம் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் நிறுவப்பட்டிருந்த திகதியை இனங்காண முடியாதிருந்ததுடன், 2017 ஜூன் மாதம் முதல் 2018 பெப்பரவரி 28 திகதி வரை 1.62 மில்லியன் நிலுவைத் தொகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. தபால் திணைக்களத்தினால் 2018 பெப்ரவரி 28 திகதியின் பின்னர் ஓய்வூதிய திணைக்கள வளாகத்தில் இருந்து அந்த அலுவலகத்தை அகற்றுவதாக அறிவித்திருந்த போதிலும், அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக மேல்மாடியில் இருக்கும் 03 அறைகளுக்கு நுழையும் வசதிகள் தபால் நிலையத்தின் ஊடாக காணப்பட்டமையால் இந்த மூன்று அறைகளிலும் 927 சதுர அடி அளவு பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்றது.

(ஆ) ஓய்வூதியம் உரித்துடைய அரச ஊழியர்களிடம் அரச சேவை ஓய்வூதிய பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்பு பெற்றிருந்த திகதி மற்றும் அங்கத்துவ இலக்கம் இன்றி மீளாய்வாண்டின் போது 91,496 ஓய்வு பெற்றோர்களிடம் ரூபா 7.26 மில்லியன் பெறுமதியான தொகை ஓய்வூதியத்தில் இருந்து அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) இள வயதினர் வைப்பு ரூபா 2,897,209 தொகைக்கான சான்றிதழ்கள் 739 தொகை மற்றும் ரூபா 192,629 தொகைக்கான 02 சேமிப்பு கணக்கு புத்தகங்கள் 2018 அக்தோபர் 15 திகதி அளவிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் கணக்கு பிரிவில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது.

## 2.8 பொதுமக்களுக்கு சேவையாற்றல்

2016 இன் 12 ஆம் இலக்கங் கொண்ட தகவல்கள் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம், தனது இணையத் தளத்தில் பொதுமக்களினால் பயன்பாட்டுக்காக வைக்க வேண்டிய தகவல்கள் வைக்காததுடன், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கு 2017 பெப்ரவரி 03 திகதிய மற்றும் 2004/66 இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் கட்டளை இலக்கம் 20 இன் பிரகாரம் முற்போக்கு தகவல்கள் வெளியிடுவதன் கீழ், அனைத்து பொது அதிகார சபையினாலும் இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்ப படிவத்தின் மூலம் வெளிப்படுத்தவேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 2.9 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 145,137 | 139,768 | 5,368 | 4 |
| | மூலதன | 49 | 41 | 9 | 18 |
| | **மொத்தம்** | **145,186** | **139,809** | **5,377** | **3.7** |
| 2014 | மீண்டுவரும் | 147,128 | 145,718 | 1,410 | 0.95 |
| | மூலதன | 96 | 95 | 0.77 | 0.8 |
| | **மொத்தம்** | **147,224** | **145,813** | **1,411** | **0.96** |
| 2015 | மீண்டுவரும் | 187,567 | 180,235 | 7,333 | 3.9 |
| | மூலதன | 52 | 52 | 0.18 | 0.35 |
| | **மொத்தம்** | **187,619** | **180,287** | **7,333** | **3.9** |
| 2016 | மீண்டுவரும் | 200,623 | 199,105 | 1,518 | 0.76 |
| | மூலதன | 40 | 32 | 7 | 17.5 |
| | **மொத்தம்** | **200,663** | **199,137** | **1,525** | **0.76** |
| 2017 | மீண்டுவரும் | 210,876 | 210,065 | 811 | 0.38 |
| | மூலதன | 31 | 29 | 2 | 6.45 |
| | **மொத்தம்** | **210,907** | **210,094** | **813** | **0.39** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் பயன்படுத்தாமை**

02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.25 மில்லியனிற்கான மொத்த ஏற்பாடுகளும் பயன்படுத்தாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

09 செலவு விடயங்களுக்காக ரூபா 1,008 மில்லியன் இற்கான மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்தமையால் அந்த செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 672 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிக்கப்பட்டிருந்த தொகை தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையான வீச்சு அளவில் காணப்பட்டது.

**(ஆ) செலவுகளை உரிய முறையில் கணக்கீடு செய்யாமை**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 45,792 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய கடன்மீதி ஒதுக்கீட்டுக் கணக்கில் பின் இணைப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியருந்த போதிலும், திறைசேரியும் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அந்த கடன் மீதிகள் கணக்கீடு செய்யக்கூடிய விதமாக நடவடிக்கை முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறிய கடன்மீதிக்கு அடிப்படையாகக் கொண்டிருந்த ஓய்வூதிய பணிக்கொடை செலவு அரசாங்க செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.10 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்கள்**

திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்காக 02 வருமான குறியீடுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 22,000 மில்லியன்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்ாவண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 22,940 மில்லியன் தொகையான வருமானம் ஒன்றினை சேகரித்திருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 104 சதவீதமாக இருந்தது.

விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தின் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | மிகைத்து/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.04.01.00 | 14,000 | 15,531 | 1,531 | 111 |
| 20.04.02.00 | 8,000 | 7,409 | (591) | 92 |
| மொத்தம் | 22,000 | 22,940 | 940 | 104 |

மேற்கூறிய வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) 20.04.01.00 கொண்ட வருமானக் குறிப்பீடு – சமூக பாதுகாப்புப் பங்களிப்புத் தொகை – மத்திய அரசு**

பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 26,914,725 தொகை வருமானத்தில் இருந்து திருப்பி செலுத்தியிருந்ததுடன், அக்கொடுப்பனவுகளில் ரூபா 26,396,371 தொகையினை உறுதிப்படுத்துவதற்காக 2001 ஜனவரி 15 ஆம் திகதிய 1/2001 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனங்களில் இருந்து வரவு அறிவித்தல் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விதவை / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய மற்றும் பங்களிப்புத் தொகை திருப்பி செலுத்துதல் ஆகிய நலன்கள் உரித்தாக்கும் போது பங்களிப்பு தொகை கிடைத்தல் குறிப்பிட்ட நபர்களிடம் குறிப்பாக இடையறாமல்

கிடைக்கப்பெற்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக முறையான நடைமுறை ஒன்று திணைக்களத்தில் காணப்படவில்லை.

**(ஆ) 20.04.02.00 கொண்ட வருமானக் குறிப்பீடு – சமூக பாதுகாப்புப் பங்களிப்பு தொகை – மாகாண சபைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண சபைகளில் கடமையாற்றும் விடுவிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகததர்களின் பங்களிப்புத் தொகைகள் கிடைத்தல் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையினால் அதனொடு தொடர்பான நிலுவை பங்களிப்புத் தொகைகள் தொடர்பாக விபரங்கள் கண்டறிவதற்கு முடியாதிருந்தது.

(ii) தலைப்புகளின் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்கு செலவு வைக்கப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை மற்றும் நிலுவைத் தொகையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றவிதமாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று திணைக்களத்தில் செயற்படுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 7,409.26 மில்லியன் தொகையான வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக முடியாதிருந்தது.

(iii) வருமானக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 496.30 மில்லியன் இற்கான நிலுவை வருமானம் ஒன்று காணப்பட்டது. மாகாணகளினால் அறிவித்திருந்த தொகைக்காக மாத்திரம் நிலுவை வருமானம் என கணக்கீடு செய்திருந்த போதிலும் மேல் மாகாண சபையின், உள்ளூராட்சி நிறுவனங்களின் நிலுவை வருமானம் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(iv) 02 மாகாண சபைகளினால் பெற்றிருந்த தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய விதவைகள் மற்றும் அநாதைகள் பங்களிப்பு என அறிவித்திருந்த பெறுமதி மற்றும் வருமானக் கணக்கில் அந்த மாகாண சபையின் கீழ் அறிவித்திருந்த நிலுவை இடையே ரூபா 23.28 மில்லியன் இற்கான முரண்கள் காணப்பட்டன.

## 2.11 அரச ஊழியர்களுக்கு முற்பணக் கணக்கு

---

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

---

திணைக்களத்திற்குரிய 25301 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 53.00 | 53.00 | 28.00 | 29.44 | 160.00 | 138.70 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள அரச அமைச்சுக்கு / திணைக்களங்களுக்கு, மாற்றும் பெற்றுச் சென்றுள்ள மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.82 மில்லியன் ஆக காணப்பட்டது. அந்த நிலுவை மீதிகளை 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரை மற்றும் 05 வருடங்களை விட மிகையான காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன்மீதியை அறவீடு செய்வதற்காக திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்த போதிலும் இதுவரை தீர்த்திருக்கவில்லை.

### 2.12 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்தல்

**சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மக்கள் வங்கியின் 033-1001-6-9026657 கொண்ட நடைமுறைக் கணக்கில் 2015 ஜனவரி முதல் 2016 அக்தோபர் மாதம் வரை காணப்படும் ரூபா 173,255 பெறுமதியான 7 இனங்காணப்படாத கொடுப்பனவுகள் 2018 ஜூலை 30 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை.

### 2.13 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 456.48 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 23 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 06 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1078 | 896 | 182 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 64 | 11 | - |
| (v) | ஏனைய (தற்காலிக) | - | 4 | | 4 |
| | மொத்தம் | 1199 | 993 | 210 | 4 |

**பதவியணி பயிற்சி வழங்கல்**

மீளாய்வாண்டிற்கான பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மொத்த பதவியணியின் 993 இல் 928 பேருக்கு குறைந்த அளவு 8 மணித்தியாளங்கள் ஏனும் பயிற்சி ஒன்று வழங்கியிருக்கவில்லை.